<u>செய்தி வெளியீடு எண்.804</u> <u>நாள்.10.12.2007</u>

**<u>இலவச எரிவாயு இணைப்பு மற்றும் நுகர்வோர்களுக்கு மாற்று (Re-fill) எரிவாயு உருளைகள் காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும் !</u>**

**<u>எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு ஆலோசனை நடத்தி அறிவுரை !!</u>**

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய எண்ணெய் நிறுவனங்களின் எரிவாயு பிரிவு உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (10.12.2007) காலை 10.30 மணிக்கு ஆய்வுக்கூட்டம் நடத்தினார்கள். ஆய்வின்போது இந்த ஆண்டு (2007-2008) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இலக்கினை அடைய உடனடியாக எண்ணெய் நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும், காப்புத்தொகை செலுத்தப்பட்ட பயனாளிகளுக்கு உடனடியாக எரிவாயு இணைப்பு வழங்கப்பட வேண்டுமென்றும், போதுமான எரிவாயு உருளைகள் மற்றும் ரெகுலேட்டர்கள் உடனடியாக வழங்க எண்ணெய் நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும், எண்ணெய் நிறுவன முகவர்கள் எரிவாயு இணைப்பு வழங்க அனுப்பப்படும் அரசு அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும் முகவர்கள் இல்லாத தாலுக்கா / ஒன்றிய பகுதிகளில் 69 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் முகவர்கள் நியமிப்பது பற்றி எண்ணெய் நிறுவனங்கள் ஆய்வு செய்மாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், எண்ணெய் நிறுவனங்கள், இலவச எரிவாயு இணைப்பு வழங்க அனுப்பப்படும் அரசு அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளித்தால்தான், அரசு நிர்ணயித்துள்ள இலக்கினை அடையமுடியும். அப்பொழுது தான் அடுப்பு ஊதும் பெண்கள் அல்லல் தீர்த்திட, எரிவாயு இணைப்புகளுடன் இலவச எரிவாயு அடுப்புகளும் வழங்கப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உயர்ந்த நோக்கத்தோடு அறிவித்த அறிவிப்பினை செயல்படுத்த முடியும். எனவே, தேவையான எரிவாயு உருளைகளை எண்ணெய் நிறுவன முகவர்களுக்கு வழங்கப்பட்டால் தான்

அவர்களும், அரசு நிர்ணயித்துள்ள இலக்கினை எய்த அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். அதே நேரத்தில் நுகர்வோர்களுக்கு காலதாமதமின்றி மாற்று எரிவாயு உருளைகளை உடனடியாக வழங்கப்பட வேண்டும். அரசு வழங்கும் இலவச எரிவாயு இணைப்பு திட்டத்தினால் ஏற்கனவே எரிவாயு இணைப்பு பெற்றவர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்பட கூடாது. மாற்று எரிவாயு உருளைகள் **(Re-fill)** கோரி பதிவு செய்யும் நுகர்வோர்களுக்கு காலதாமதமின்றி எரிவாயு உருளைகள் உடனடியாக வழங்க வேண்டும் என்றும், மேலும் வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு உருளைகளை வியாபார ஸ்தலங்களுக்கு செல்வதை தடுக்க வேண்டும் என்றும், இது குறித்து அனைத்து எண்ணெய் நிறுவன முகவர்களுக்கு உடனடியாக தக்க அறிவுரை வழங்கி, குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், திரு.க. சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.எஸ். சந்திரமோகன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. பணீந்த்ர ரெட்டி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. ஜேக்கப் ப்ரியன், தலைமை மண்டல மேலாளர், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் திரு. சஞ்சீவ் ராமன், தலைமை பொது மேலாளர் (தெற்கு), இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், திரு.ஜி. சீனிவாசன், மண்டல எரிவாயு ஒருங்கிணைப்பாளர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், மற்றும் எண்ணெய் நிறுவன விநியோகஸ்தர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கு பெற்றார்கள்.

*****

வெளியீடு: **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**